# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை - 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 215/ந/2017

ஆணை எண். 261/2017

நாள் : 24/11/2017

திரு சி. பாலுச்சாமி,
ஸ்ரீவில்லிபுத்தூர். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
சாத்தூர் நகராட்சி,
சாத்தூர். – எதிர் மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி, எண்.67/111, கூனாங்குளம் வடக்குத் தெரு முகவரியில் வசிக்கும் திரு சி.பாலுச்சாமி அவர்களின் 02.11.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.11.2017 அன்று பெறப்பட்டு 215/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு சம்பந்தமாக சாத்தூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி, எண்.67/111, கூனாங்குளம் வடக்குத் தெரு முகவரியில் வசிக்கும் திரு சி.பாலுச்சாமி என்பவர், சாத்தூர் நகராட்சியில் சுகாதார அலுவலராக தான் பணியாற்றிய போது சம்பளத்திலிருந்து சேமநல நிதிக்காக பிடித்தம் செய்யப்பட்ட ரூ.30,000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) தனது ஓய்விற்குப் பின் வழங்கப்பட்டதென்றும், அதற்கான வட்டித் தொகை நாளது தேதி வரை வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுவின் மீது சாத்தூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. சாத்தூர் நகராட்சியில் பணியாற்றி ஓய்வு பெற்ற / மரணமடைந்த / பணியாற்றும் அலுவலர்களின் சேமநலநிதி தவணைத் தொகைக்கு 1994–95 முதல் 2010–11 வரை உள்ள காலத்திற்கு வட்டிக் கணக்கீடு செய்து உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்டதாகவும், அத்துறை சுட்டிக்காட்டிய சில குறைகளை நிவர்த்தி செய்து மீளவும் 7.11.2017 அன்று அத்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். வட்டித் தொகை அனுமதிக்கப்பட்டு, நகராட்சிக்கு தொகை வரப்பெற்றவுடன், அத்தொகை மனுதாரருக்கு வழங்கப்பட்டு விடுமென்றும் உறுதியளித்துள்ளார். நீண்ட காலமாக நிலுவையில் உள்ளதை முழுமுப

நிலையில் கொண்டு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் இசைவினை விரைவில் பெற்று, முறையீட்டு மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய வட்டித் தொகையினை காலந்தாழ்த்தாது வழங்கப்படவேண்டுமென சாத்தூர் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 24– ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்
27/11/17

27/11/17

பெறுநர்

1. திரு சி. பாலுச்சாமி,
எண்.67/11, கணாங்குளம் வடக்குத் தெரு,
ஸ்ரீவில்லிபுத்தூர்,
விருதுநகர் மாவட்டம் (இணைப்புடன்)

2. நகராட்சி ஆணையர்,
சாத்தூர் நகராட்சி,
சாத்தூர்.
விருதுநகர் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்